



## தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

# தமிழ் வளர்ச்சி

### மானியக் கோரிக்கை எண் – 46

**அறிவிப்புகள்**

**2023 - 2024**

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

# தமிழ் வளர்ச்சி

## மானியக் கோரிக்கை எண். 46

## அறிவிப்புகள்
## 2023 - 2024

**தங்கம் தென்னரசு**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம்,
தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு,
தொல்லியல் துறை அமைச்சர்

# தமிழ் வளர்ச்சித் துறை

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**

தமிழ் வளர்ச்சித் துறைக்கான 4 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

## தங்கம் தென்னரசு

**தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம்,**
**தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு,**
**தொல்லியல் துறை அமைச்சர்**

**1. ஐந்து தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்து பரிவுத் தொகையாக ரூபாய் 45 இலட்சம் வழங்கப்படும்.**

1. இராவ் சாகேப் திரு. கு. கோதண்டபாணி பிள்ளை (ரூ.10 இலட்சம்)
2. முனைவர் இரா. மோகன் (ரூ.10 இலட்சம்)
3. திரு. கோ. முத்துப்பிள்ளை (ரூ.10 இலட்சம்)
4. திரு. ம.சு. சம்பந்தம் (ரூ.10 இலட்சம்)
5. திருமதி அம்சவேணி (ரூ.5 இலட்சம்)

**2. ஒரிசா மாநிலத்திலுள்ள புவனேஸ்வர் தமிழ்ச் சங்க கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் ரூபாய் 15 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.**

1992-ஆம் ஆண்டு முதல் ஒரிசா மாநிலத்தில் இயங்கி வரும் புவனேஸ்வர் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் மொழியை கற்பிக்க ஏதுவாக வகுப்பறைகள் மற்றும் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் ரூபாய் 15 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

**3. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் திருவுருவச் சிலையும் மற்றும் பாவாணர் கோட்டமும் சென்னையில் அமைக்கப்படும். இதற்கென ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் வழங்கப்படும்.**

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் திருவுருவச் சிலை சென்னைப் பல்கலைக்கழக இணைவக கட்டட வளாகத்தில் அடிபீடம் மற்றும் சுற்றுத் தரைத்தளத்துடன் நிறுவப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 50 இலட்சம் வழங்கப்படும்.

சென்னையில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் கோட்டம் ரூபாய் 3 கோடியில் அமைக்கப்படும்.

**4. அனைத்து மாவட்டங்களில் உள்ள கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் திங்கள்தோறும் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை நடத்தப்படும். இதற்கென ரூபாய் 38 இலட்சம் வழங்கப்படும்.**

தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக தமிழ்நாட்டில் பயிலும் அனைத்துக் கல்லூரி மாணவர்களிடையே தமிழ் மொழி மீதான ஆர்வத்தையும் இலக்கிய சிந்தனையையும் மேம்படுத்தி, அவர்களை தமிழ் ஆர்வலராகவும் அவர்களின் தன்னம்பிக்கையை மேம்படுத்தும் நோக்கில் தமிழறிஞர்களைக் கொண்டு ஒரு நாள் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை திங்கள்தோறும் மூன்று அல்லது நான்கு மாவட்டங்கள் என ஓராண்டில் அனைத்து மாவட்டங்களில் நடத்தப்பெறும்.

இத்திட்டத்திற்கு தொடர் செலவினமாக ரூபாய் 38 இலட்சம் வழங்கப்படும்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.